**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**முன்னிலை:– திருமதி.R.தமிழரசி, B.A.,B.L.,**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, குளித்தலை,**
**2026 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 21ம் நாள் புதன்கிழமை**
**I.A.No.09/2025 In O.S.No.223/2015**

1. P. மணி (எ) சுப்ரமணி ... மனுதாரர்/வாதி

**//எதிராக//**

1. செல்வராஜ் (இறப்பு)
2. குமார்
3. மணி
4. அழகுமணி
5. ரமேஷ்
6. குமரேசன்
7. தேன்மொழி ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

8. திவ்யா ... உத்தேச தரப்பினர்/பிரதிவாதி

இம்மனு என் முன்பாக 19.01.2026 ஆம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.S.M.சாகுல் ஹமீது அவர்கள் முன்னிலையாகியும், 1ம் மனுதாரர் இறந்து விட்ட நிலையிலும், 2 முதல் 7 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.A.ஜாபர் சேட் அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பிலும் எடுத்துரைத்த வாதங்களை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**உத்தரவு**

மனுதாரர் தரப்பில் இறந்துபோன 6ம் பிரதிவாதியின், வாரிசுதாரரை சேர்த்து வழக்கினை மேல்நடத்த கேட்டு உரிமையியல் விசாரணை நடைமுறைச் சட்டம் கட்டளை 22 விதி 4 ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம்**

1) மனுதாரர் இவ்வழக்கின் வாதி. இவ்வழக்கு நிலுவையில் உள்ள சமயத்தில் 6ம் பிரதிவாதி 24.08.2025 ல் இறந்து விட்டதாக குறிப்பாணை

தாக்கல் செய்யப்பட்டது. எனவே 6ம் பிரதிவாதியின் வாரிசை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்க வேண்டியது அவசியம் ஆகிறது. இறந்துபோன 6ம் பிரதிவாதியின் தாயார் இவ்வழக்கில் ஏற்கனவே தரப்பினராக உள்ளார். எனவே இம்மனுவில் கண்டுள்ள உத்தேச தரப்பினரை தவிர வேறு யாரும் இறந்துபோன 6ம் பிரதிவாதி குமரேசனுக்கு வாரிசு இல்லை. எனவே இம்மனுவில் கண்டுள்ள குமரேசன் மனைவி திவ்யா என்பவரை இவ்வழக்கில் சேர்க்க வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**5ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்து மற்ற எதிர்மனுதாரர்கள் ஏற்றுக்கொண்ட எதிருரையின் சுருக்கம்**

2) இம்மனுவில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்க வேண்டும். 6ம் பிரதிவாதிக்கு அவர் மனைவி மட்டுமே வாரிசு என்பதை மனுதாரரே தான் நிரூபிக்க வேண்டும். இம்மனுவில் வாரிசுகள் யாரும் விடுபட்டு போய்விட்டால் இந்த எதிர்மனுதாரர்களுக்கு பெருத்த கஷ்டம் ஏற்படும் என்பதால் இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிருரை தாக்கல் செய்துள்ளார்.

3) தற்போது தீர்மானம் செய்யப்பட வேண்டியது இம்மனு அனுமதிக்கப்படத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

**தீர்வு**

4) இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. மனுதாரர் தரப்பில் இவ்வழக்கானது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் 6ம் பிரதிவாதி குமரேசன் இறந்து விட்டதாகவும், அவரது வாரிசை சேர்க்க வேண்டுமென மனு தாக்கல் செய்துள்ளார். எதிர்மனுதாரர்கள் தரப்பில் பலத்த ஆட்சேபணை எதுவும் தெரிவிக்கவில்லை. 6ம் பிரதிவாதியின் வாரிசை சேர்த்து இவ்வழக்கை நடத்த வேண்டும் என்பது அவசியம் என்றும் இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எந்த இழப்பும் ஏற்படாது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**இறுதியாக**

இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் குறிப்பெடுக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் படித்து சரிபார்க்கப்பட்டு பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026ம் ஆண்டு ஜனவரி திங்கள் 21ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

R TAMILARASI Digitally signed by R TAMILARASI

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**குளித்தலை.**

**மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்**

–இல்லை–

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்**

–இல்லை–

R TAMILARASI Digitally signed by R TAMILARASI

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**குளித்தலை.**

**************************************

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்**
**குளித்தலை**

**I.A.No. 09/2025**
**in**
**O.S.No. 223/2015**

**DRAFT / FAIR ORDER**

**D.D.21.01.2026**

**************************************